சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)

முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி -6

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

| | | | |
|---|---|---|---|
| 61. | அ. ஜாஸ்பின் ஷீலா | "கிணற்றில் விழுந்த தீண்டாமை" சிறுகதைத் தொகுப்பில் மனிதநேய மாண்புகள்" | 210-213 |
| 62. | செ. ஐஸ்வர்ய சுகிலா & ஜே. ஜெயரதி பொன்மலர் | கனிமொழியின் அகத்திணை கவிதையில் பெண்நிலை | 214-217 |
| 63. | ஜீ. பாண்டியலட்சுமி | சிலப்பதிகாரத்துள் காணலாகும் மாண்புடைமனிதர்கள் | 218-221 |
| 64. | அ. சஜன் | ஜி. நாகராஜனின் குறத்தி முடுக்கு நாவலில் பரத்தையர் | 222-224 |
| 65. | ப. சவிதா | அகமரபுகள் நோக்கில் சம்பந்தர் பாடல்களும் மனிதநேயமும் | 225-229 |
| 66. | திரு. ஆ.சந்திரசேகர் | "அட்டகுளத்திலும்ஒட்டிக்கொள்ளும் ஆம்பல்கவி" | 230-232 |
| 67. | எம்.மெஹ்முதா | 101 மனுஷ்யபுத்திரனின் கவிதைகளில் மனித நேயம் | 233-237 |
| 68. | செ.மகேஸ்வரி | தமிழர் பண்பாட்டில் பசிப்பிணி போக்கும் மனிதநேய மாண்புகள் | 238-242 |
| 69. | தி.சுமதி & ப.சக்தி குமாரவேல் | வேதாத்திரிய நோக்கில் குடும்பச் சீர்திருத்தச் சிந்தனைகள் | 243-246 |
| 70. | சு.பாத்திமா | ப.க.பொன்னுசாமியின் `படுகளத்தில்' மனிதநேயம் | 247-250 |
| 71. | மா.நடராசன் | இராமலிங்க வள்ளலாரின் மனிதநேயச் சிந்தனைகள் | 251-254 |
| 72. | கு.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 255-258 |
| 73. | ந.ஜெயவசந்தி | புறநானூற்றில் மனித நேய பண்புகள் | 259-262 |
| 74. | கோ.ஜெமிலா | புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள் | 263-265 |
| 75. | செ.கிளாறா டெல்பின் ஜடா & நா.ரா.ஷிபஜா | கிறிஸ்தவ இலக்கியத்தில் இடம்பெறும் திருநங்கைகளின் மனிதநேயம் | 266-268 |
| 76. | நா.பன்னீர்செல்வம் | தமிழ் இலக்கியங்களில் காணும் மனிதநேய மாண்புகள் | 269-273 |
| 77. | தெ.சந்திரா | நீதி இலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம் | 274-276 |
| 78. | தெ.சந்திரா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 277-280 |
| 79. | தமிழ்செல்வி.த | அஃறிணை உயிர்களிடத்தில் மனிதநேயம் | 281-283 |
| 80. | ச.குருஞானாம்பிகா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 284-286 |
| 81. | சு.பிரியதர்ஷினி | கண்ணகியின் மனிதநேயம் | 287-290 |
| 82. | மு.சௌந்தரியா | கலித்தொகைத் தலைவியின் மனிதநேய மாண்புகள் | 291-294 |
| 83. | மோகனப்பிரியா.ச | கம்பராமாயணத்தில் இராமனின் மனிதநேயம் | 295-297 |
| 84. | த.திலகவதி | சூரியகாந்தன் நாவல்களில் மனிதநேயம் | 298-301 |
| 85. | ப.பத்மா & காசிபட்டா சத்யமூர்த்தி | பக்திஇலக்கியங்களில் மனிதநேய மாண்புகள் | 302-306 |
| 86. | வானதிபகீரதன் | ஈழத்துசிறுவர் பாடல்களில் உயிர்களிடத்தில் அன்பும் மனிதநேயமும் | 307-310 |
| 87. | கா.மகேசுவரி | புறநானூற்றில் மனிதநேய விழுமியங்கள் | 311-313 |
| 88. | மு.செந்தமிழ்ச்செல்வி | மூதின் முல்லைப் பாடல்களால் மானுடம் | 314-316 |
| 89. | K.சாந்தி முனைவர் & C.விஸ்வநாதன் | சித்தர் இலக்கியத்தில் மனித நேயப்பண்புகள் | 317-321 |
| 90. | த. கீதாஞ்சலி | கடையெழுவள்ளல்களின் மனிதநேயமாண்புகள் | 322-325 |
| 91. | தங்கராசா கோபிநாத் | சுப்பிரமணிய பாரதியாரது தேசபக்திபாடல்களில் மனிதநேயம் | 326-329 |
| 92. | சி.அமுதா | எட்டுத்தொகை அகப்பாடல்களில் தொழில்சார் மனிதநேயம் | 330-333 |
| 93. | இரா.இரமேஷ் | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 334-340 |
| 94. | கா. திருநாவுக்கரசு & செ.விஸ்வநாதன் | கம்பன் வடித்த இராவணன்பாத்திரமும் பேராண்மை அறமும் | 341-345 |

Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

| | | |
|---|---|---|
| 95. ந. வெங்கடேஷ் | திருக்குறளில் மனித மாண்புகள் | 346-348 |
| 96. சு.நளினி | சங்கப் பாடல்களில் மனிதநேயம் | 349-351 |
| 97. சௌ. மைதிலி | மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம் | 352-355 |
| 98. ஜோ. ஜீவா | மனித நேய நோக்கில் மலர்வதியின் 'காத்திருந்த கருப்பாயி' நாவல் | 356-358 |
| 99. டு. ஜோஸ் விஜி | நீலபத்மநாபன் கவிதைகளில் மனிதநேய மாண்புகளின் இழப்பு | 359-362 |
| 100. B.S.ஆஷா | குறுந்தொகையில் திணைசார் மக்களின் மனித நேய மாண்புகள் | 363-365 |
| 101. அ.மகபூபூ. | சிலப்பதிகார மாந்தர்களின் மனிதநேயமாண்புகள் | 366-369 |
| 102. பொ.மா.பழனிசாமி | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய வாழ்வியல் மதிப்புகள் | 370-374 |
| 103. பா.அருள்ஜோதி | சங்க புறப்பாடல்களில் மனித நேய சிந்தனைகள் | 375-379 |
| 104. ம.சித்ரகலா | சுந்தரகாண்டத்தில் மனிதநேய மாண்புகள் | 380-385 |
| 105. அமுதன் | இலக்கியத்தில் மனித நேயம் தமிழ் இலக்கியங்களை முன்வைத்து | 386-389 |
| 106. S.Jagadambal & Dr. K. Perumal | Spirituality Fosters Humanity | 390-393 |
| 107. டாக்டர். சு.பிரசாத் & செ.சண்முகவடிவு | சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம் | 394-399 |
| 108. த. மகிலா ஜெனி | விவேக சிந்தாமணியில் மனித நேயம் | 400-403 |
| 109. த.ரதீஸ் | இலக்கியத்தில் மனிதநேயம் | 404-407 |
| 110. ர.மாலதி ரவீந்திரன் | சங்க இலக்கியங்களில் மனிதநேயம் | 408-410 |
| 111. திருமதி.க.தேவி | இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள் | 411-416 |
| 112. ந.ஜெயசுதா | இலக்கியங்களில் மனிதநேயம் | 417-419 |
| 113. இரா.ஜெயந்தி | திருக்குறள் காட்டும் மனிதநேயக் கருத்தாக்கம் | 420-423 |
| 114. க. உஷா | திருக்குறளும் மனித மாண்புகளும் | 424-427 |
| 115. D. ஞானசௌந்தரி | கீதைகூறும்ஞானம் | 428-432 |
| 116. க.முத்துஇலக்குமி | பாரதியார் கவிதைகளில் மனிதநேயப்பண்பு | 433-436 |
| 117. க.தனலட்சுமி | தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம் | 437-439 |
| 118. பொ.வீரசித்திவிநாயகன் | இலக்கியங்களில் திருக்குறள் உணர்த்தும் மனிதநேயமும் மருத்துவமும் | 440-442 |
| 119. மு.சுகந்தி | புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம் | 443-446 |
| 120. த.பரமேஸ்வரி | புதுக்கவிதைகள் உணர்த்தும் புரையோடிய மனிதநேயம் | 447-450 |
| 121. பேரா ர.சூர்யா | மனிதநேயச் சிந்தனைகள் | 451-453 |
| 122. மு.அபிநயா | கருவறைவாசனையில் பெண்ணுலகம் | 454-456 |
| 123. ஜோதிமணி.து | காட்டுக்குட்டியில் மாண்டுபோகும் மனிதநேயம் | 457-460 |
| 124. இரா.விஷ்ணுப்பிரியா | புலமையும் மனிதநேயமும் | 461-469 |
| 125. திலகவதி பு | புகழேந்தி புலவர் இயற்றிய நல்லதங்காள் கதையில் மானுடம் | 470-473 |

# புதுக்கவிதைகள் உணர்த்தும் புரையோடிய மனிதநேயம்

முனைவர் த.பரமேஸ்வரி
தமிழ்த்துறைத்தலைவர்
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

மனம் பெற்றதால் மனிதன் எனப்பட்டான். மனம் மனிதனை வகைப்படுத்தும் மிகப்பெரிய கருவி. மனதில் அன்பு, கருணை, நேசம், நேயம் நிறையப்பெற்றவண்ணம் இருக்க வேண்டும். நேயம் என்றால் நேசம், நேசம் என்றால் "அன்பு,தகுதி" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. சிந்தித்தால், நேயம் என்பதற்கு அன்பு என்றே பொருள் கொள்ளலாம். இதைத்தான் வள்ளுவர்,

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மாந்தளிர்ந் தற்று-** (கு.எண்.78)

என்றார். வள்ளுவன் சொன்னதுபோல, வன்பாலை நிலத்தில் பட்டமரம் தழைப்பதைப் போலத்தான் இன்றைய சமுதாய வாழ்க்கையும் அன்பு கசிவதில்லை:கசக்கிறது: காய்ந்து போனது. ஆதலால் இது இல்லை என்பதைப் புதுக்கவிதைகள் தனது நெடுவெளியில் எடுத்துக் கூறுவதன் மூலம் தனித்து இயங்குகின்றன. இல்லை என்பதை இல்லையென வலிறுத்துவது புதுமையல்ல என்ற வினா எழும்பும்: இல்லை என்றாலே 'வேண்டும்','இருக்க வேண்டும்' 'மீட்பு செய்ய வேண்டும்' என்பதுதானே இதன் சாரம், சாரம் அமைத்தன் வழி முறைகளுக்குச் சாணம் படித்தலே இம்முயற்சி.

## குடும்பத்தில் மனிதநேயம்

சரியான தேர்வுப் பொருத்தத்தில், சரியான புரிதலுடன் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே குடும்பம்: சிறந்த இல்லறம். அதை அமைத்துக் கொள்வதற்கானத் தகுதி இப்பொழுது என்னவென்று தீர்மானிக்படுகின்றது? பெண்ணிற்கு இருக்க வேண்டிய தகுதி 'வரதட்சணை' கொடுப்பதாகும். இத்தகுதி இருந்தால் இனிக்கும் இல்லறமாக அமைய முடியும்: இல்லையெனில் குடும்ப வாழ்க்கையே இல்லை என்பதுதான் இன்றைய சமுதாயத்தில் பொரும்பாலான நிலை. இதன் உச்சகட்ட நிலையை உணர்த்தும் மேத்தா,

**வைர அட்டிகையும்**
**வரதட்சணை பாக்கிக்கும்**
**உன்னுடைய**
**தந்தை வந்து**
**உடனே**
**தராவிட்டால்**
**தோகையே**
**உன்னைத்**
**தொடமாட்டேன் என்று**
**இளைஞர்கள் சொல்வது**
**இன்றைய இல்லறம்"**

(காத்திருந்த காற்று : 11,33)

எனப் பொங்கி எழும் பாங்கு பாராட்டுதற்குரியது, ஆனாலும்,

**அன்றும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

என வள்ளுவர் விளக்கியதும் இவருக்கு முற்பட்ட காலத்திலேயே,

**துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்**
**பிடி ஊட்டிப் பின் உண்ணுதல் களிறு**

என எடுத்துக்கூறியதும் என்னவாய்ற்று என சிந்தித்துப் பார்க்க வேண்டியதாய் உள்ளது.

சமுதாயத்தில் நேயம் இருக்க வேண்டுமெனில் முதலில் குடும்பத்தில் இருக்க வேண்டும். தாயின் அன்புதான் எல்லாவற்றிலும் மேலான அன்பு: தாயிடம் பெற்றதைத்தான் குழந்தைகள் சமுதாயத்திற்குக் கொண்டு சேர்க்கிறது. தாயின் நேசம் குழந்தைக்குப் போய்ச் சேர்வதே தவணையாகத்தான் கிடைக்கிறது. குடும்பத்தை இயக்கும் நேரத்தில், இயந்திரப் பயணத்தில், பொருள் தேடி ஓடும் ஓட்டத்தில் தாய்மைப் பண்பைச் செலவிவிடக்கூட முடியவில்லை: முடிவதில்லை.

இதை வைரமுத்து 'இன்னொரு தேசியகீதம்' என்னும் தனது நூலில் "பெண்களின் அக.புறநிலை" எனும் தனது நூலில்,

ஆய்த்தமாகும் அவசரத்தில்
ஊட்ட நினைக்கும் பால்கூட
உறைந்து விடுகின்றது
அன்புக்கு நேரமில்லை
ஆனால்
காட்டவேண்டிய பாசத்தை
அவள்
ஞாயிற்றுக் கிழமைக்குத்
தள்ளிப் போடுகின்றாள் - (ப.45)

என்ற வரிகள் கண்ணீரை வரவழைக்கின்றது.புறநானூற்றுப் பாடலானது,

புலிப்பாற் பட்ட ஆமான் குழவிற்குச்
சினங்கழி மூதாக் கன்று படுத்துது ஊட்டும்"
— (புற. 323)

என்ற வரிகள் "புலியிடம் அகப்பட்டுக் கொண்ட மானின் கன்றுக்கு முதிய பசு ஒன்று தன் கன்றாக நினைத்து தன் பாலைக் கொடுத்தது" என்றக் கருத்தை முன்வைத்துப் பாடியது. விலங்கின் நேயத்தை விளக்குவதன் மூலம் 'மனிதன் விலங்கைவிட விலங்காகிவிட்டான்' என்பது புரிகிறது.

சமுதாயத்தில் மனிதநேயம் வறுமை

ஜனநாயகம் என்பதே 'மக்களை மக்கள் ஆள்வது'. இப்படியொரு ஆட்சியில் தற்கால நிலையில் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினரை நசுக்கிக, அர்களை வறுமையின் பிடியில் அகப்படச் செல்வதைக் காட்டுகிற: முதலாளி, தொழிலாளி என்ற அதிகார வர்க்கப் பிரிவினை தீமூட்டுகிறது: இதை சு. இளங்கோ என்ற கவிஞன்,

ஒரு
கம்யூனிஸ்டு வாதி
கடவுளிடம் வேண்டிக்கொண்டான்
இப்படி:
கிருஷ்ணா
குழலை வைத்துவிட்டு வா
வயலை உழுகப் போவோம்
கொதிப்பாகல் பிறந்த நம்
தத்துவச் தீப்பொறிகள்
இந்திய முதலாளித்துவத்தின்
கொழுவிலே பற்றி எரியூட்டும்'

(ஆகஸ்டும் அக்டோபரும் ப.13) என்றும்

இரண்டாம் வேற்றுமை
உருபிற்குப் பின்னும்
நான்காம் வேற்றுமை
உருபிற்குப் பின்னும்
வல்லினம் 'வந்தால்
ஒற்று இட வேண்டும்
அங்கு இங்கு எங்கு
இப்படி இப்படி எப்படி
என்னும் பதங்களிள் பின்னாலே....
ஒற்றெழுத்து இட
சோறில்லா ஏழைக்குச்
சோறிடும் வழியை
ஏன் சொல்லித் தரலை. —
(ஆக்டோபஸ்"ம் கீரப்பூவும் - புற-10-11)

என்று கவிஞர்கள் எடுத்துரைப்பதன் வறுமையின் பிடியை அகப்பட்டுக்கொண்டிருக்கிற சமுதாயத்தை உணரமுடிகிறது. மேற்கண்ட கருத்து சங்ககாலப் புலவர்கள் கூறிய

நெற்பல பொலிக! பொன் பெரிது சிறக்க!
விளைக வயலே! வருக இரவலர்! பால்
பல ஆறுக! பகடுபல சிறக்க!
-( ஐங்குநுறூறு)

எனும் பாடல் வளம் பெருக வேண்டும், இரவலர் வருகை வேண்டும் என வேட்கை கொள்ளும் தலைவியின் பண்பு நலத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் கருத்தோடு முரண்படுவதை

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
பிறவாது இதுகேள்! மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது
(மணிமேகலை)

என்ற பாடல்வழியும் உணரமுடிகிறது. இந்தக் கருத்துக்கள் வறுமை என்பது எல்லாக் காலங்களிலும் இருப்பதை உணர முடிந்தாலும் அந்தக் காலத்தில் இரவலர்களுக்கு ஈய இருந்தார்கள்; இரப்பவர்களுக்கு ஆதரவு நல்கக் கூடியப் புரவலர்கள் இருந்தார்கள். இப்பொழுது அந்நிலை குறுகிவிட்டதை மேற்கண்ட புதுக்கவிதைகள் காட்டுகின்றன.

**சாதி, மத, நிற, இனவெறி**

மனிதநேயம் அற்றுவிட மிக முக்கிய கரும்புள்ளிகளாகிய சிக்கல்கள் சாதி, மதம், இனவெறி என்பவையாகும். இப்பிரச்சனைகள் குறிதத்து,

சாதி
மனிதன்
தன் முகத்தில்
தானே பூசிக்கொண்ட
கரி (மேத்தா –அவர்கள் வருகிறார்கள் ப.36)

என சாதியால் மனிதம் செத்துவிட்டது என்பதையும்,

மதங்களிடம்
விலகல் கடிதம் கொடுப்பது தவிர
வேறு வழியுண்டா என்று
கடவுள்
யோசிக்கிறான்
(நடைமறந்த நதியும் திசை மாறிய ஓடையும்)

என வைரமுத்து கூறியதில் மதத்தால் மனிதம் செத்துவிட்டது என்பதையும்,

பக்கத்து மாநிலங்களுக்கும்
பால் கொடுக்காமல்
நதி நங்கைகளின்
மார்புகளிலேயே
முடிச்சுப் போடும்
மாநில வெறியர்கள்
(நந்தவன நாட்பற்று – 94)

என மேத்தா கூறியதில் மாநில வெறியால் மனிதம் மாயமானது என்பதையும்,

அங்கே
பிணங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன;
நாம்
எத்தனை விக்கெட்டுகள் விழுந்தன? என்று
விசாரித்துக் கொண்டிருக்கிறோம்.
அவர்கள்
சயினைட் அருந்திக் கொண்டிருக்கிறார்கள்
நாம்
அதர பானம் பருகிக் கொண்டிருக்கிறோம்
(அப்துல் ரகுமான் சுட்டுவரல் - பக்17-18)

என்பதில் ஈழத்தமிழர் பிரச்சனையில் நமக்கிருக்கும் மனித நேயத்தைக் காட்டுவதாய் அமைகிறது.

**அரசியல்**

சமுதாயத்தில் கொள்கைகளை நிலைநாட்டுவதாய்க் கூறிக்கொண்டு பலவண்ண

கட்சிக் கொடிகள் நிரம்பிய புற்றீசல் அரசியல் வாதிகள் மக்களை நசுக்குவதில், ஏமாற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.இதை,

சுதந்திர தேவி!
வெள்ளையனே வெளியேறு
என்றோம்
வெளியேறி விட்டான்
வெள்ளையனே வெளியேறு
யாரைப் பார்த்து
யார் சொல்வது -

( நடைமறந்த நதியும், திசை மாறிய ஓடையும் 16.30)

என்ற கவிதையில் பதிய வைப்பதன் மூலம் பெரும் கொள்ளையர்கள் அரசியல்வாதிகள் ; சிறும் கொள்ளையர்கள் அவர்களைச் சார்ந்து இயங்கும் மக்கள் என்பதை உணர முடிகிறது.

மேற்கூறிய துறைகளின் வாயிலாகக் கூறப்பட்ட கருத்துக்கள் வழி வலியுறுத்துவது இத்துறைகளில் முதலில் மனித நேயம் வளர வேண்டும் என்பதேயாகும்.

❖❖❖